ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்ட சமூகம்

# மொபைல் இணைய திறன் பயிற்சிக் குறிப்பு

அடிப்படை மொபைல் இணைய திறன்கள்
தொடர்பில் மக்களுக்கான பயிற்சி வழிகாட்டி




Copyright © 2017 GSM Association

# Bitesize Training

பயிற்சிபெறுனர்கள் மொபைல் இணையம் தொடர்பாக கேட்கும் கேள்விகளுக்கு பயிற்சியாளர் பதிலளிக்கும் வகையில் இந்த பக்கம் தயாரிக்கப்பட்டுள்ளது. சாதாணமாக நபர்கள் இணையம் தொடர்பாக அடிக்கடி கேட்கும் கேள்விகளுக்கு எளிய தெளிவுபடுத்தல்கள் உள்ளன. கைப்பிரதியின் அச்சு பிரதியொன்றை அருகில் வைத்திருப்பது பயிற்றுனருக்கு நன்மை பயக்கும். பயிற்சி குறிப்பில் அந்தந்த தொகுதிகளுக்கான எடுத்துக்காட்டுகளையும் நீங்கள் காணலாம்.

## அது என்ன?




**"இணைய போஸ்டர்" காட்டுங்கள்** "இணையம் என்பது உலகம் முழுவதுமுள்ள கோடிக்கணக்கான கணினிகள், தொலைபேசி வாயிலாக, செய்மதி மற்றும் கேபள்கள் மூலம் ஒன்றுடன் ஒன்று தொடர்புபடும் வலையமைப்பாகும். அதன்மூலம் உங்களுக்கு பாரிய அளவு தகவல்கள் கிடைக்கும். இணையம் அனைவருக்காகவும். அதனை பயன்படுத்தக்கூடியவர், கூடாதவர் என வரையறை இல்லை. கணினி, மொபைல் ∴போன் அல்லது டெப்லட் ஊடாக டேட்டா உள்ள எவருக்கும் இணையத்திற்கு நுழையலாம்."

## அதனை எதற்கு பயன்படுத்துவது?


"நீங்கள் பலதையும் செய்ய இணையம் உதவும். உதாரணத்திற்கு நண்பர்கள், குடும்பத்தவருடன் தகவல்கள் பரிமாறவும், கதைக்கவும், படங்களை அனுப்பவம், வீடியோ பார்க்கவும், இசைகளைக் கேட்பதற்கும், பொருட்களை கொள்வனவு செய்வதற்கும் அவற்றுக்கான கொடுப்பனவுகளை செலுத்தவும் இதன்மூலம் முடியும். இதுதவிர எந்ததுறை சார்ந்த அதாவது செய்தி, காலநிலை, பொழுபோக்கு அட்டவணை சமயம் அல்லது விளையாட்டு தகவல்களை பெறவும் முடியும். தொழில் தேட, சுகாதார ஆலோசனை பெற்றுக்கொள்ள, புது திறன்களை பயிலவும் இணையம் உங்களுக்கு உதவும்."

தெளிவுபடுத்துங்கள் : பயிற்றுனர் ஊடாக இணையம் மூலம் கிடைக்கும் நன்மைகள் தொடர்பான தனது தனிப்பட்ட அனுபவங்கள், நன்மைகளை தெளிவுபடுத்துங்கள்.

**பயிலுனருக்கு அதனை பொருத்தமாக்குங்கள்:** பயிலுனரின் வாழ்க்கை செயற்பாடுகளுக்கு அது எவ்வகையில் உதவும் என்பதை கலந்துரையாடுங்கள்.

## அது எவ்வாறு செயற்படுகின்றது?

இணையத்திற்கு நுழைய, இரண்டு வகையான மொபைல் ∴போன்களை பயன்படுத்த முடியும்






**1. ஸ்மார்ட் ∴போன்** : இது சிறு கணினி போன்றது. அதன் திரையை தொடுவதன் ஊடாகவே செயற்படுகின்றது. பொத்தான்களை அழுத்த தேவையில்லை. படங்கள் எடுக்க, இசை, வீடியோ பார்க்க இதிலுள்ள “அப்ஸ்” என்ற கணினி நிகழ்ச்சி ஊடாக உங்களால் துரிதமாக இணைய சேவையை பெறலாம்.

**2. பியூச்சர் ∴போன்** : இவை ஸ்மார்ட் ∴போன்களைவிட குறைந்த அம்சங்கள் கொண்டவை. தொடுவதன் ஊடாக செயற்படுத்தக்கூடிய திரை இல்லாதபோதிலும், இசை கேட்க, படம் எடுக்க முடியும். பிரவுசர் மூலம் இணையத்தில் பிரவேசித்து ஒன்லைன் சேவை பயன்படுத்தும் வசதி உள்ளது.

## டேட்டா செலவு




“உங்கள் மொபைல் ∴போன் மூலம் இணையத்தில் பிரவேசிப்பதற்கு, உங்களுக்கு மொபைல் டேட்டா அல்லது வைபை (Wi-Fi) இணைப்பை பயன்படுத்தலாம்.” **டேட்டா போஸ்டரை காண்பியுங்கள்.**

“நீங்கள் சாதாரணமாக உங்கள் ∴போன் ஊடாக இணையம் பயன்படுத்தும்போது, நீங்கள் மொபைல் டேட்டா பயன்படுத்துகின்றீர்கள். அதனை உங்கள் மொபைல் வலையமைப்பு நிறுவனத்திடம் அல்லது ∴போன் அட்டைகளை விற்பனை செய்யும் கடைகளில் கொள்வனவு செய்யலாம்”

“இணையத்தில் நீங்கள் செய்யும் சில விடயங்கள் அதாவது வீடியோ பார்த்தல், இசை கேட்டல் போன்றவற்றுக்கு அதிக டேட்டா செலவாகும். அதற்கு நீங்கள் அதிகம் செலவிட வேண்டி இருக்கும்”


# போஸ்டர்,
# கட்அவுட் மற்றும்
# தகவல் பிரதிகள்

# அமர்வின் அடிப்படை விதிமுறைகள் இங்கு நாம் பார்க்கப் போவது:



## பாதுகாப்பானது

இப்பயிற்சியின் அனைத்து தகவல்களும் தனிப்பட்டதாக இருக்கட்டும். இக்குழுவிலுள்ள ஏனைய நபர்களுடன் உங்கள் தனிப்பட்ட இலக்கங்களை பரிமாற வேண்டாம் என சிபார்சு செய்கின்றோம்.



## பொது குழுமம்

இங்குள்ளவர்கள் பல பின்னணி, அறிவு மற்றும் கருத்துகள் கொண்டவர்கள். எமது இந்த பொது குழுமத்தில் நாம் ஒருவரை ஒருவர் மதித்து உதவ வேண்டும்.



## நேர்மறை மற்றும் மரியாதை

உங்கள் கருத்துகள் மற்றும் விவாதங்களில் நேர்மறையாகவும் மரியாதையாகவும் இருங்கள். சரியான அல்லது தவறான பதில்கள் கிடையாது. உங்களை பரிசோதிப்பது இங்கு எமது பணி அல்ல.



## நியாயமான

நாம் சிறு குழுவாகவே செயற்படுவதுடன் பொது தொலைபேசி உங்களுக்கு வழங்கப்படும். அனைவருக்கும் கேட்பதற்கு மற்றும் தொலைபேசி பாவனைக்கு சமமான சந்தர்ப்பம் வழங்க நாம் விரும்புகின்றோம்.

# இணையத்தில் பாதுகாப்பாக இருக்க குறிப்புகள்



தெரியாத நபர்களை கவனத்திற் கொள்ளாமல், தொந்தரவு தருபவர்களை “பிளக்” செய்யுங்கள்



உங்கள் தனிப்பட்ட தகவல்களை இரகசியமாக வைத்திருங்கள்



நீங்கள் காணும் அல்லது அனுபவிக்கும் ஏதாவது உங்களை அசௌகரியப்படுத்தினால், நம்பிக்கையான ஒருவருக்கு அதனை கூறுங்கள்.



கண்ணியமாக இருங்கள். மற்றவர்களின் தனிப்பட்ட விடயங்களுக்கு மதிப்பளியுங்கள்

# வரையறைகள்

மொபைல் இணையம் தொடர்பாக உள்நாட்டுக்கான தகவல்களை இதில் உள்ளடக்க பயிற்சியாளருக்கு முடியும்.

## 2G / 3G / 4G

நீங்கள் பயன்படுத்தும் இணையம் பல்வேறு வேகங்களை கொண்டது. குறைந்த இணைய வேகம் 2G. அதனைவிட வேகமான இன்டர்நெட் 3G. வேகமானது 4G ஆகும்.

## App

உங்கள் ஃபோனிலுள்ள சேவைகளுக்கு பிரவேசிக்கும் இலகுவான வழி “அப்” ஆகும். இணைய சேவைகளுக்கான உதா: WhatsApp, Facebook, Google. இந்த அப் ஊடாக துரிதமாக இணையதிற்குள் பிரவேசித்து சேவைகளை பெறலாம்.

## Address bar

www.india.in

முகவரிப்பட்டை (address bar) ஊடாக நீங்கள் எந்த இணையத்தளத்தில் இருக்கின்றீர்கள் என்பதை அறியலாம். உங்கள் இணையத்தள முகவரியை எப்போதும் முகவரிப்பட்டையில் காணலாம். உதா www.google.in

## Advert அல்லது Ad

Buy Now!

‘எட்’ (ad) என்பது, நீங்கள் எதையாவது விற்பனை செய்த வழங்கும் தகவல். அந்த ‘எட்’ மீது கிளிக் செய்யாதிருப்பது நல்லது.

- Ads வீடியோவாக அல்லது படமாக உங்கள் திரையில் தோன்றலாம்.
- அதுதவிர, Google பெறுபேற்று பட்டியலில் மேலாகவுள்ள லிங்க்களில் அல்லது திரையின் வலது பக்கத்தில் Ads காணலாம்.

## Browser

வெப் ப்றவுசர் என்பது இணையத்தளங்களுக்கு செல்ல அல்லது பார்ப்பதற்கு இடமளிக்கும் கணினி திட்டமாகும். கீழுள்ளவை பொதுவான ப்றவுசர்களாகும்.

Google Chrome | Mozilla Firefox | Opera | Microsoft Internet Explorer

## Data

நீங்கள், உங்கள் ஃபோன் ஊடாக இணையத்திற்குள் பிரவேசிக்கும்போது நீங்கள் பயன்படுத்துவது டேட்டா ஆகும். உங்கள் மொபைல் வலையமைப்பு நிறுவனம் அல்லது கடைகளில் டேட்டா அட்டைகளை கொள்வனவு செய்யலாம்.

## Feature phone

பீச்சர் ஃபோன், ஸ்மார்ட் ஃபோன்களை விட குறைந்த அம்சங்களை கொண்டது. தொடுவதன் ஊடாக செயற்படுத்தும் திரை இல்லாதபோதிலும், இசைகளை கேட்க, புகைப்படம் எடுக்க முடியும்.

## Google

கூகுள் (Google) என்பது, இணையத்தில் எந்த தகவலையும் தேடுவதை இலகுவாக்கும் இணைய சேவையை வழங்கும் தளமாகும்.

# வரையறைகள்

மொபைல் இணையம் தொடர்பாக உள்நாட்டுக்கான தகவல்களை இதில் உள்ளடக்க பயிற்சியாளருக்கு முடியும்.

## Internet

இணையம் என்பது, உகம் முழுவதும் மில்லியன் கணக்கானவர்களல் கணினி,தொலைபேசி வாயிலாக, செய்தி மற்றும் கேபிள் மூலம் தொடர்புபடும் வலையமைப்பாகும். அது அடிக்கடி வளர்ச்சியடைகின்றது. இதன்மூலம் உங்களுக்கு பாரியளவு தகவல் மற்றும் சேவைகள் பல பெறலாம். இணையம் அனைவருக்குமானது.அதனை பயன்படுத்த எவருக்கும் வரையறை இல்லை.கணினி, மொபைல் ஃபோன், டெப்லட் உடன் டேட்டா இணைப்பு இருந்தால் எவருக்கும் இணையத்திற்குள் போகலாம்.

## Link

லிங்க் என்பது உங்கள் ஒரு இணையத்தளத்திலிருந்து இன்னொரு இணையத்தளத்திற்கு தொடர்புபடுத்துவதாகும். மற்றைய இணையத்தளத்திற்கு செல்ல நீங்கள் அந்த லிங்க்கை கிளிக் செய்ய வேண்டும்.

## Megabytes & Gigabytes

மெகாபைட் (MB) மற்றும் ஜிகாபைட்(GB) என்பன நீங்கள் மொபைல் இணையம் யன்படுத்தும்போது செலவாகும் டேட்டா அளகாகும். GB என்பது MB போன்று ஆயிரம் மடங்காகும். இணையத்திலிருந்து பாடலை தரவிறக்கம் (டவுன்லோட்) செய்ய 5MB செலவாகும். (நிமிடத்திற்கு 1MB).

## Search

இணையத்தில் தேடுவதற்கு சேர்ச் பன்சன்ஸ் உங்களுக்கு உதவும். தேடும் பெட்டியில் நீங்கள் தேடும் வார்த்தையை டைப் செய்யும்போது, அதற்கு இணையான பெறுபேறுகள் வந்து கிடைக்கும்.

## Smartphone

இணையத்திற்கு நுழைய, இசை, வீடியோ களஞ்சியப்படுத்தி வைக்க மற்றும் அப்ஸ் இயக்கும் வறையிலான மொபைல் ஃபோன் ‘ஸ்மார்ட் ஃபோன்” ஆகும். இதற்கு தொடு திரை இருக்கும்.

## YouTube

யூடியூப் என்பது இணையத்தில் உள்ளதை பார்ப்பதற்கும், கேட்பதற்குமான வீடியோக்களை இலகுவாக கண்டுபிடிக்கும் இணைய சேவையாகும். (அதில் வீடியோ மட்டுமே இருக்கும்)

## Website

இணையத்தில் தகவல்கள் பல்வேறு இணையத்தளங்களிலேயே உள்ளன. ஒன்றுக்கு ஒன்று மாறுபட்ட பல்வேறு இணையத்தளங்கள் உள்ளன. உதா: கூகுள் ஒரு இணையத்தளமாகும். யூடியூப் இன்னொன்றாகும்.


## WhatsApp

வட்ஸ்அப் என்பது, நீங்கள் தெரிந்த நபர்கள் (குடும்பத்தவர், நண்பர்கள் போன்றோர்) உடன் தொடர்புபட, தகவல் அனுப்ப உள்ள ஒரு இலகுவான இணைய சேவையாகும்.


## WiFi

வைபை வலயம் (WiFi zone) என்பது உங்கள் ஃபோன் டேட்டா பயன்படுத்தாமல் இணையத்திற்கு செல்லும் வழியாகும். உங்களுக்கு இலவசமாக இணையத்திற்கு செல்ல கிடைக்கும். சில கடைகள் மற்றும் நிறுவனங்களில், பொது இடங்களில் “வைபை வலயங்கள்” இருக்கும்.

# இணையம் தொடர்பான அறிமுகம்?



# டேட்டா செலவு








Icon Cutouts - Apps






Icon Cutouts - Phone Functions









# சான்றிதழ்

**அடிப்படை மொபைல் இணைய திறன்கள் பயிற்சி**

வெற்றிகரமாக நிறைவுசெய்யப்பட்டுள்ளது

திகதி

கையொப்பம்



# சான்றிதழ்

அடிப்படை மொபைல் இணைய திறன்கள் பயிற்சி

வெற்றிகரமாக நிறைவுசெய்யப்பட்டுள்ளது

திகதி

கையொப்பம்